# ஷங்சை சியாரோங் (Jiarong, Shangzhai)




**Population:**
4,090 (2000)
5,040 (2010)
6,200 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Gyarong, Gyarung, Rgyarong, Chiarong, Jarong, Chiajung, Shangzhai

**மக்கள்தொகை:** 4,090 in China (2000, P Hattaway)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங், சியாரோங் மொழி

**மொழி வழக்குகள்:** 3 (Dayili, Zongke, Puxi)

**திபெத்திய புத்தமதம்:** 90%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை


**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** JIH

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** மேற்கு சீனாவின் குறைவான மக்கள்தொகை அடர்த்தியுடைய வடமேற்கு சிசுவான் மாநிலத்தில் சுமார் 4,000 ஷங்சை சியாரோங் மொழி பேசும் மக்கள் வசிக்கின்றனர். ஷங்சை சியாரோங் மக்கள் வசிக்கும் பகுதி முன்னாட்களில் திபெத்திய ராஜ்யத்தைச் சேர்ந்ததாகும் ஆனால் சீனா அதைத் தன்னோடு இணைத்துக்கொண்டு சிசுவான் மாநிலத்தோடு சேர்த்துவிட்டது. ஷங்சை சியாரோங் மக்கள் பகுதி துசு (Doqu) மற்றும் சொங்க (Zhongke) நதிகள் இணையும் இடத்தில் சம்தாங் (Zamtang) மாவட்டத்தின் ஷங்சை தாலுகாவிலுள்ள ஷிலி (Shili), ஷொங்க (Zongke), பூஷி (Puxi) பட்டணங்களைச் சுற்றியுள்ளது.

**அடையாளம்:** சியாரோங் மக்களின் ஐந்து (எர்கோங் மொழியையும் சேர்த்தால் ஆறாகும்) வித்தியாசமான மொழிகளில் ஷங்சை மொழி ஒன்றாகும். திபெத்திய மொழியைக் காட்டிலும் வித்தியாசமான மொழியைப் பேசினாலும் இவர்களைச் சீன அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் சேர்த்துள்ளனர். சியாரோங் மக்களை ஒரு தனிச் சிறுபான்மை இனமாகப் பிரிக்க அவசியம் உண்டா என அறியும்படி இவர்களைக் குறித்துக் கூடுதலான ஆய்வுகள் செய்யப்படவேண்டுமெனச் சீன வட்டாரங்களில் பேச்சுக்கள் இருந்தாலும், பெய்ஜிங்கில் (Beijing) உள்ள அதிகாரிகள் இனம் பிரிக்கும் பணி முடிவடைந்துவிட்டதாகக் கூறி புதிய மனுக்களை ஏற்க மறுக்கின்றனர்.

**மொழி:** ஷங்சை சியாரோங் மற்றும் மற்ற சியாரோங் மொழிகள் திபெத்திய-பர்மிய மொழிக்குடும்பத்தின் ஷியங் துணைப் பிரிவைச் சேர்ந்தவையாகும். ஜோனதன் இவான்ஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார் "இம்மொழியின் ஒரு சில வார்த்தைகள் ஓர் ஆவணத்தில் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளதே தவிர மற்ற இலக்கியங்களில் இம்மொழியைப்பற்றி ஏறக்குறைய எங்குமே குறிப்பிடப்படவில்லை. மற்றெல்லா சியாரோங் மொழிகளைக் காட்டிலும் ஷங்சை மொழி எர்கோங் மொழியோடு அதிகத் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இதனுடைய உட்பிரிவுகள் ஐயப்பாடான நிலையிலிருந்தாலும் இதன் முக்கிய வகைகளான தயீலி (Dayili) , தி (Di) மற்றும் ரோங்(Rong) ஆகியன ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை ஆகும். தயீலி வட்டார மொழி வழக்கு கி.பி.1993 ல் செய்யப்பட்ட ஓர் ஆய்வின்போது ஷியங் துணைப்பிரிவில் சேர்க்கப்பட்டது.

**வரலாறு:** 'இன வாசல்' என அழைக்கப்படும் சிசுவான் மாநிலத்தின் இப்பகுதியில் வசிக்கும் அநேக இனங்கள் மத்தியில் ஷங்சை சியாரோங் இனமும் ஒன்றாகும். 'சீன-திபெத்திய இனங்களும் இ-திபெத்திய இனங்களும் சந்திக்கும் இந்த வாசல் இழுபறிப் போராட்டத்தின் அரங்காக இருந்துவந்திருக்கிறது. சியங் (Qiang), தி




மற்றும் ரோங் எனப்படும் இனங்கள் வாழ்ந்து செழித்ததும் வித்தியாசமான சக்தியையும் கால அளவுகளையும் கொண்ட அநேக உள்ளூர் அரசாங்கங்கள் தோன்றியதும் இந்த அரங்கில் தான்...... இது வரலாற்றாசிரியர்கள் மற்றும் மொழியியலாளர்களுக்கு ஆய்வு செய்ய செழிப்பான பகுதியும் கூட ஆகும்.'

**மதம்:** திபெத்திய புத்தமதம் மற்றும் ஆவி வழிபாடு இவர்களுடைய தினசரி வாழ்க்கையை ஆதிக்கம் செய்கிறது. இவர்கள் மூன்றடுக்குக் கல்வீடுகளில் வசிக்கிறனர். 'கீழ்த்தளத்தைக் கால்நடைகளுக்காகவும், இடையில் உள்ள தளத்தை (முதல் தளம்) வசிப்பதற்காகவும் மற்றும் மேல் தளத்தைத் தானியங்களைச் சேமிக்கவும் பூஜை அறையாகவும் பயன்படுத்துகின்றனர். பூஜை அறையில் தங்களது பாதுகாப்பிற்காகத் தெய்வங்களுக்குத் தூபம் காட்டி உணவுகளைப் படைக்கின்றனர்.'

**கிறிஸ்துவம்:** இவர்களது வரலாற்றுக் காலங்கள் முழுவதும் இவர்கள் (ஷங்சை மக்கள்) வசிக்கும் பகுதி கிறிஸ்துவத்திற்கு அடைக்கப்பட்டிருக்கிறது. சட்ட ஒழுங்கற்ற கொள்ளையர்கள், 7,000 மீட்டர்கள் வரை (23,000 அடி) உயரும் தொடர்பற்ற மலைகள், குறைந்த சாலைகள் மற்றும் திபெத்திய புத்தமதத்தின் சக்திவாய்ந்த ஆதிக்கம் ஆகியவை சந்திக்கப்படாத ஷங்சை சியாரோங் மக்களின் செவிகளில் சுவிசேஷம் சென்றடைய முடியாதபடி தடைசெய்கின்றன.